# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மணிகண்டன் | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | ராஜா | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 27.11.2024.

A1 to A3 present.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் காளிப்பட்டி பிரிவு ரோட்டில் குடியிருக்கிறேன். நான் தனியார் வங்கியில் கலக்சன் மேனேஜராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியுமா என்றால் எதிரி சந்திரசேகரை மட்டும் தெரியும். புகார்தாரர் ரமேசை எனக்குத் தெரியும். ரமேஷ் எனக்கு நண்பர். 10 வருடத்திற்கு முன்னர் ரமேஷ் வீடும் என்னுடைய வீடும் எதிரெதிர் வீடுகள். 18.05.2018ம் தேதி ஜெயக்குமார் என்பவர் எனக்கு போன் மூலம் ரமேசின் அப்பா சின்னுசாமி இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்.

அதனால் நான் ரமேசின் வீட்டிற்கு சென்றேன். உள்ளே செல்வதற்கு எனக்கு பயமாக இருந்ததால் வீட்டிற்குள் நான் போகவில்லை. சின்னுசாமி எப்படி இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் ரமேஷ் என்னை காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார். மறுநாள் நான் காவல்நிலையத்திற்கு சென்றேன். போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

எனக்கு ரமேசின் அப்பா சின்னுசாமி அவர்கள் இறப்பிற்கு சந்திரசேகர்தான் காரணம் என்று ரமேஷ் என்னிடம் சொன்னார். அதை நான் தெரிந்து கொண்டேன். இந்த விவரத்தை நான் போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. பிரச்சனை எதனால் நடந்து என்று ரமேசிடம் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையின்போது 18.5.2018 அன்று ரமேஷ் எனக்கு போன்செய்யது அப்பா சின்னுசாமி பேச்சு மூச்சில்லாமல் படுத்து கிடந்தார் என்றும், கையை தொட்டு பார்த்தபோது ஜல்லென்று இருப்பதாகவும் சீக்கிரம் வா என்று சொன்னார் என்று சொன்னால் என்றால் சரியல்ல. ஜெயக்குமார் தான் எனக்கு போன் செய்தார். நான் சென்றபோது செல்வராஜ் மற்றும் மணிகண்டன் இருவரும் அங்கு இருந்தார்கள் என்று சொன்னால் எனக்கு சரியாக நினைவில்லை. நான் உள்ளே சென்று சின்னுசாமியை

பார்த்தபோது அவருக்கு மூக்கின் மேல் ரத்தக்காயமும், கழுத்தின் இடதுபக்கம் லேசான காயத்துடன் கழுத்தை இறுக்கி கன்றிபோய் மல்லார்ந்த நிலையில் இறந்துகிடந்தார் என்று போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தேனா என்றால் இல்லை. நான் உள்ளே சென்று பார்க்கவில்லை. எனக்கு தகவல் கொடுத்த ஜெயக்குமார் சம்பவ இடத்தில் இருந்தார் என்றால் சரி. சம்பவத்தன்று பொன்னுசாமி என்பவர் தென்னை மரம் வெட்ட வந்தார் என்றும் அவர் பார்த்தபோது ரமேஷ் வீட்டிற்கு மாலை 3.00 மணி சுமாருக்கு சந்திரசேகரும் அவருடன் 2 பேர்களும் வீட்டிற்கு வந்தார்கள் என்றும், அவர்கள் சென்றபிறகு வீட்டிலிருந்து அலறல் சத்தம் கேட்டது என்றும், சந்திரசேகர்தான் சொத்திற்காக அவரது அப்பாவை 2 பேர்களை கூட்டிவந்து கழுத்தை இறுக்கி கொன்றுவிட்டு பத்திரத்தை எடுத்து சென்றுள்ளார் என்று வாக்குமூலம் அளித்தேனா என்றால் இல்லை. சம்பவத்தன்று நடந்த சம்பவங்களை போலிசாரிடம் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.